# <u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

RCOP.No.45/2023 Date : 01.09.2025

பெயர் : குமார் எ.ம.சா. 1

1) சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார். மனுதாரர் மார்க்கதரிசி நிதி நிறுவனத்தில் கடன் பெற்றதை மனுதாரருக்கு நான் திருப்பி செலுத்தி வந்தது தொடர்பாக ஆவணம் தாக்கல் செய்வதாக இதற்கு முன்பாக குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்ட தொடர்பாக மேற்படி தொகை செலுத்தியதற்கு உண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதாக குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்ட நிலையில் அந்த ஆவணங்களை தற்போது நீதிமன்றத்திற்கு எடுத்து வந்து தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை அது ஆவணங்கள் எனது ஆடிட்டர் வசம் உள்ளது. நான் மனுதாரருக்கு ஆதரவாக மேற்படி நிதி நிறுவனத்தில் எவ்வித தொகையும் செலுத்தவில்லை என்றாலும் அவ்வாறு செலுத்தி இருந்தால் அதற்கு உண்டான ஆதாரத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல அந்த ஆதாரங்கள் எனது ஆடிட்டர் வசம் உள்ளது. எனது ஆடிட்டரின் பெயர் என்ன என்றால் நாகராஜ். அவர் எங்கு உள்ளார் என்றால் குரோம்பேட்டையில் உள்ளார்.

2) எத்தனை வருடமாக மேற்படி நாகராஜ் என்பவர் எனது ஆடிட்டராக உள்ளார் என்றால் பதினைந்து ஆண்டுகளாக ஆடிட்டராக உள்ளார். மேற்படி எனது ஆடிட்டர் நாகராஜிடம் அந்த ஆவணங்களை பெற்று தாக்கல் செய்கிறீரா என்றால் அவர் கொடுத்த உடனே நான் தாக்கல் செய்கிறேன். நான் மனுதாரருக்கு தற்போது வரையில் 23 லட்சத்து 40 ஆயிரம் வாடகை பாக்கி செலுத்த வேண்டியுள்ளது என்றால் இல்லை. நான் வாடகைதாரர் கிடையாது மனுதாரர் எனது நிறுவனத்தின் பங்குதாரர். எனது நிறுவனத்தின் பெயர் என்னவென்றால் அருணா லெதர் கார்ப்பரேஷன் ஆகும். மேற்படி அருணா லெதர் நிறுவனத்தின் பங்குதாரர் மனுதாரர் என எடுத்துரைப்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்தீரா என்றால் ஆவணம் எதுவும் எழுதி கொள்ளவில்லை ஆனால் ஒன்றாக சேர்ந்து சொத்தை மட்டும் தான் கிரயம் வாங்கினோம். எனது ஆடிட்டர் மூலம் சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஆவணங்களிலும் நான் தான் கையொப்பம் செய்து வருகிறேனா என்றால் ஆமாம்.

3) அதில் அருணா லெதர் கார்ப்பரேஷன் உரிமையாளர் குமார் என மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ் வழக்கை அருணா லெதர் உரிமையாளர் நான் மட்டுமே என குறிப்பிட்டு வழக்கை நடத்தி வருகிறேனா என்றால் ஆமாம். மேற்படி அருணா லெதர் நிறுவனத்தின் வங்கி கணக்கு ஆகியவற்றை நான் தான் நிர்வகித்து வருகிறேன் என்றால் ஆமாம். மேற்படி அருணா லெதர் நிறுவனத்தின் வரவு செலவு கணக்குகளை நான் மட்டும் தான் பார்த்து வருகிறேன் என்றால் இல்லை. மனுதாரரும் பார்த்து வருகிறார். மேற்படி அருணா லெதர் நிறுவனம் லாபத்தில் இயங்கி வருகிறது என்றால் இல்லை. மேற்படி எனது நிறுவனத்தின் கடந்த நிதியாண்டில் எவ்வளவு வரவு செலவுகள் ஏற்பட்டுள்ளது என்றால் எதுவுமே ஏற்படவில்லை ஜீரோவாக உள்ளது. கடந்த நிதி ஆண்டில் மேற்படி அருணா லதர்ஸ்நிறுவனத்தில் எவ்வித பரிவர்த்தனையும் ஏற்படவில்லை எனக் குறிப்பிட்டு தான் எனது ஆடிட்டர்

மூலம் வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறார் என்றால் ஆமாம் அந்த ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்கிறீரா என்றால் தாக்கல் செய்வேன்.

4) மேற்படி நிறுவனத்தின் பின் நம்பர் மற்றும் உரிமையாளர் குமார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.மேற்படி லெதர் நிறுவனத்தில் ஏற்றுமதி செய்து வருகிறார் என்றால் இல்லை.அருணா லெதர் நிறுவனத்தில் எத்தனை நபர்கள் வேலை பார்த்து வருகிறார்கள் என்றால் நான்கு நபர்கள் தான் வேலை பார்த்து வருகிறார்கள். அந்த நிறுவனத்திற்கு மின் கட்டணம் எவ்வளவு செலுத்தி வருகிறீர் என்றால் 15 முதல் 20 ஆயிரம் செலுத்தி வருகிறேன். அந்த நிறுவனத்திற்கு எவ்வளவு திறன் கொண்ட மின்சாரம் பெற்று வருகிறீர் 45 எச்பி அளவு கொண்ட மின்சாரம் பெறப்பட்டு வருகிறது. மனு சொத்து எனக்கு கூட்டு பாத்தியம் என நிரூபணம் செய்வதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. நானும் மனுதாரரும் மனுசொத்தை கிரயம் பெறுவதற்காக சேர்ந்து தொகை செலுத்தி அதற்கு உண்டான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். மனு சொத்திற்குண்டான ஆவணம் மனுதாரர் நந்தகோபால் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். மனுசொத்திற்கு மனுதாரர் பெயரில் பட்டா மற்றும் வீட்டு வரி ஆகியவை வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது பிரசாத் என்பவர் பெயரில் தான் பட்டா இருந்துள்ளது.பிரசாத் என்பவர் பெயரில் இருந்த பட்டாவானது மனுதாரர் கிரயம் பெற்ற பின்னிட்டு மனுதாரர் பெயரில் பட்டா மற்றும் சொத்து வரி ஆகியவை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5) மனுசொத்திற்கு தெற்கில் எனக்கு சொந்தமாக 1200 சதுர அடி கொண்ட மனை உள்ளது என்றால் அதை நானும் மனுதாரரும் சேர்ந்து ஒன்றாக தான் வாங்கினோம்.மேற்படி 6200 சதுர அடி மனை எனது பெயரில் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான் அந்த 1200 சதுர அடி மனைக்கு எனது பெயரில் பட்டா உள்ளதா என்றால் நான் பட்டா வாங்கவில்லை அச்சொத்திற்கு எனது பெயரில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்திற்கு சொத்து வரி செலுத்தி வருகிறீரா என்றால் இல்லை.மனு சொத்து தொடர்பாக எதிர் மனுதாரர் மீது பாகப்பிரிவினை வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. நான் ஏற்கனவே தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் மீது கோரி தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கில் மனுசொத்திற்கு தெற்கில் அமைந்துள்ள 1200 சதுர அடி மனையை சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கானது ரத்து செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். ஆனால் நான் அந்த உத்தரவை எதிர்த்து செங்கல்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தையும் சேர்த்துதான் மேற்படி நான் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கில் ரத்து செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் மனுசொத்திற்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என குறிப்பிடப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் மேற்படி உத்தரவு ஆங்கிலத்தில் உள்ளதால் ஆங்கிலம் படிக்க தெரியாததால் அது பற்றி தெரியாது. மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்த அசல் வழக்கில் இடையீட்டு மனுவில் இடைக்கால உத்தரவு கோரி தாக்கல் செய்த நான் தாக்கல் செய்த மனுவில் மனுசொத்திற்கு நான் உரிமையாளர் கிடையாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நான் தாக்கல் செய்த இடையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியும்.

6) சேலம் அருகில் உள்ள ஒரு சொத்தை மனுதாரர் விற்பனை செய்து 33 லட்சத்துக்கு விற்பனை செய்து அந்த தொகை கொண்டு மனுசொத்தை மனுதாரர்

கிரையம் வாங்கினார் என்றால் அவர் அது போன்று செய்து மனுசொத்தை கிரயம் வாங்கவில்லை. மேற்படி அருணா லதர் நிறுவனத்திற்கு தமிழ்நாடு மாசு கட்டுப் பாட்டு வாரியத்திடம் இருந்து தடையில்லா சான்று ஏதேனும் பெட்ரோல் விலை என்றால் இல்லை.அருணா லெதர் நிறுவனத்துக்கு தமிழ்நாடு தீயணைப்பு துறையினரிடமிருந்து அனுமதி சான்று பெற்றுள்ளார் என்றால் பெற்றுள்ளேன். . மேற்படி அரசு துறையில் இருந்து சான்றுகள் பெறுவதற்காக மனுதாரர் நந்தகோபால் ராவிடம் இருந்து ஏதேனும் தடையின்மை சான்று பெற்றீரா என்றால் மேற்படி அருணா லெதர் நிறுவனத்திற்கு நான் மட்டுமே உரிமையாளர் என்பதால் நான் அதனை வாங்கவில்லை.

7) மேற்படி அருணா லதர் நிறுவனத்திற்கு அரசு துறையிடமிருந்து மேற்படி சான்றுகளை பெறுவதற்காக என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்றால் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட பதிவு ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன்.இடம் சம்பந்தமான ஆவணங்கள் ஏதேனும் மேற்படி அரசு அலுவலகத்தில் தாக்கல் செய்துள்ளீரா என்றால் வரி ரசிது தாக்கல் செய்துள்ளேன் வரி ரசீது மனுதாரர் நந்தகோபால் பெயரில் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரர் நந்தகோபால் ராவின் கையொப்பத்தை மோசடியாக போட்டு ஆவணங்களை மேற்படி அரசு அலுவலகத்தில் நான் சமர்ப்பித்துள்ளேன் என்றால் இல்லை. நந்தகோபால் மனு சொத்தை எப்போது பார்வையிட்டார் என்றால் ஓராண்டுக்கு முன்பாக பார்வையிட்டார்.

8) மனுதாரர் மனுசொத்தில் 12 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளே நுழைய முடியாமல் போலீசார் மற்றும் ரவுடிகள் உதவியுடன் அவர் மனுசொத்தில் நுழைவதை நான் தடுத்து வருகிறேன் என்றால் இல்லை. மனுதாரர் மனுசொத்தை உள்ளே வந்து பார்வையிட எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் நீதிமன்றம் நீதிக்கும் உத்தரவுக்கு கட்டுப்படுவேன். மனுசொத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 2 கிலோமீட்டர் இருக்கும்மனு சொத்து அமைந்திருக்கும் இடம் எந்த காவல் நிலைய எல்லைக்கு உட்பட்டது என்றால் சங்கர் நகர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்டது. அந்த காவல் நிலையத்தில் சசி என்ற காவலர் இருந்து வருகிறார் என்றால் ஆமாம். ஆனால் அவர் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு காலமாகிவிட்டார். அவர் உறவினரா என்றால் அவர் வேறு சமூகத்தை சேர்ந்தவர் நான் வேறு சமூகத்தை சேர்ந்தவர். எனது சம்பந்தி ஓய்வு பெற்ற காவல் அதிகாரி என்றால் சரிதான்.

9) எனது அண்ணன் மகன் காவலர் என்றால் சரிதான். எனது அண்ணன் மகன் பெயர் சதீஷ் என்றால் சரிதான். மேற்படி எனது உறவினர்கள் ஆன காவலர்கள் சங்கர் நகர் காவல் நிலையத்தில் பணியாற்றி வருகிறார்கள் என்றால் இல்லை கேளம்பாக்கத்தில் பணியாற்றி வருகிறார்கள். ஏற்கனவே சங்கர் நகர் காவல் நிலையத்தில் வேலை பார்த்து வந்தார்கள் என்றால் இல்லை. மனுதாரர் மீது எத்தனை முறை காவலர்கள் புகார் கொடுத்து இருக்கிறது என்றால் நான்கு ஐந்து முறை கொடுத்து இருப்பேன்.எது தொடர்பாக புகார் கொடுத்தார் என்றால் அடியாட்களை வைத்து மனுதாரர் என்னை மிரட்டியதால் புகார் கொடுத்தேன் எனது வீட்டிற்கும் மனுசொத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் ஒரு கிலோமீட்டர் இருக்கும். மனுசொத்திற்கும் மனதாரர் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 30 கிலோமீட்டர் இருக்கும். தாவா சொத்து எனது ஊரில் அமைந்துள்ள சொத்து என்றால் சரிதான். நான் மனுசொத்து அமைந்துள்ள ஊரை பூர்வீகமாக கொண்டவன் என்றால் சரிதான்.

10) மனுதாரர் ஒரு காலத்திலும் வெளி ஆட்களுடன் என்னை தொந்தரவு செய்யவில்லை என்றாலும் நான் தான் போலீசார் மற்றும் ரவுடிகளுடன் மனுதாரரை

மனுசொத்தில் நுழைய விடாமல் தடுத்து வருகிறேன் என்றால் இல்லை. மனு சொத்தை எனது மைத்துனரான ஸ்ரீதர் மூலம் கிரயம் பெறுவதற்காக மனுதாரர் வீட்டிற்கு சென்று 10 நபர்களுடன் சென்று கிரயம் பேசப்பட்டது என்றால் அது போன்று யாரும் செல்லவில்லை. சொத்தை நான் கிரையம் பெறுவதற்கு எனது பெயரில் ரூபாய் ஒரு கோடி 5 லட்சத்திற்கு இடையே ஒப்பந்தம் ஏற்படுத்தி அதனை எனது மைத்துனர் வசம் கொடுத்து மனுதாரர் இடம் கையொப்பம் பெற்றுவருமாறு பத்து நபர்களை அனுப்பி வைத்தேன் என்றால் இல்லை. நான் மனுதாரருக்கு மனுசொத்தின் தரைத்தளத்திற்கு மட்டும் ரூபாய் 23 லட்சத்தி 40,000 வாடகை பாக்கி நிலுவை தொகை உள்ளது என்றாலும் அதனை மனுதாரருக்கு நான் செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் நான் மனுசொத்தில் வாடகைக்கு இருக்கவில்லை.

11) நான் மனுசொத்திற்கு கூட்டு உரிமையாளர் கிடையாது என்றாலும் மனுதாரர் மனுசொத்தின் உரிமையாளர் என்ற காரணத்தின் அடிப்படையில் நான் மனுசொத்தில் இருந்து வெளியேற்றப்பட உள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாங்கும் சமயத்தில் நான் வெளிநாட்டில் இருந்து ஏழரை லட்சம் மதிப்புள்ள எனது நிறுவனத்துக்கு மிஷின் வாங்கினேன் என்றால் நாலரை லட்சத்திற்கு மெஷின் வாங்கினேன் அந்த மிஷினை நானும் மனுதாரரும் சேர்ந்துதான் வாங்கினோம். அந்த மிஷினை நானும் மனுதாரரும் ஒன்றாக வாங்கியதற்கு உண்டான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வெளிநாட்டு மிஷினை வழங்கியதால் மனு சொத்தை வாங்குவதற்கு என்னிடம் பணம் ஏதும் கிடையாது என்றால் சரியல்ல அந்த மிஷினை விற்று தான் மனுசொத்தை வாங்கினோம். மனுசொத்தை மனுதாரர் எவ்வளவு தொகை கொடுத்து கிரையம் வாங்கினார் என்றால் ரூபாய் 31 லட்சம் கொடுத்து நானும் மனுதாரரும் சேர்ந்துதான் கிரயம் வாங்கினோம். மனுதாரர் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.